[திரு. இரா. துரைக்கண்ணு] [2019 ஜூலை 4

ஏதுவாக, 'துவண்டுவிடாதே, நான் இருக்கிறேன்' என துடிப்புடன் செயல்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.186 கோடியே 25 இலட்சத்தை நிவாரணமாக வழங்கி, விதி எண் 110-ன்கீழ் அறிவிப்பு செய்தமைக்காக தமிழக வேளாண்மைத் துறை சார்பாகவும், தமிழக விவசாயப் பெருமக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றிகளை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இதுபோன்று நோய் தாக்கப்படுகின்றபோது, மக்காச்சோளத்திற்கென்று நிவாரணம் வழங்குகின்ற மரபு இல்லாமல் இருந்தது. விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்கி, விதியை, இன்றைக்கு மாற்றியமைத்து விவசாயிகளுடைய தலைவிதியை மாற்றிக் காட்டிய, விவசாயிகளுடைய பாதுகாவலராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 18-7-2019 அன்று பேரவையில் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 29-சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மற்றும் மானியக் கோரிக்கை எண் 47-இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) ஆகியவை 24-7-2019 அன்றும், 24-7-2019 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 32-தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகியன 18-7-2019 அன்றும், பேரவையின் ஒப்புதலுடன் எடுத்துக்கொள்ளப்படும்.